தனிநபர் மூலமாக:

ந.க.எண்:56179/நி2/4/2020

GOVT. KILPAUK MEDICAL COLLEGE HOSPITAL CHENNAI-10
12266
17 MAR 2021

மருத்துவக்கல்வி இயககககம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.
நாள்: .03.2021.

பொருள் : நிர்வாகம் - திரு.A.மதன்குமார், த/பெ.(லேட்) திரு.K.ரோசய்யா, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, சென்னை - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்து அரசாணை மற்றும் அசல் சான்றுகள் பெறப்பட்டுள்ளது - சார்பு செய்தல் - தொடர்பாக.

பார்வை : 1. தங்கள் அலுவலக கடித ந.க.எண்:4643/நி1/1/2018, நாள்:06.10.2020 மற்றும் 11.11.2020.

2. அரசாணை (2ப) எண்:34, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2) துறை, நாள்:17.02.2021.

3. அரசு கடித எண்:37025/ஏடி2/2020-2, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:17.02.2021.

*******

திரு.A.மதன்குமார், த/பெ.(லேட்) திரு.K.ரோசய்யா, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, சென்னை அவர்களின் பணியினை வரன்முறை செய்து பார்வை 2-ல் காணும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பார்வை 3-ல் காணும் அரசு கடிதத்தில் தனியரின் கீழ் காணும் அசல் சான்றுகள் பெறப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மற்றும் அசல் சான்றுகளை இக்கடிதத்துடன் அனுப்பபடுகிறது. அவற்றினை தனியருக்கு உரிய முறையில் சார்பு செய்து பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சென்னை, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

1. இறந்த அரசு ஊழியரின் மனைவி திருமதி.கேசவநாராயணம்மாள் தனது மகனுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரிய கடிதம். (அசல்)
2. இறந்த அரசு ஊழியரின் மகன் திரு.A.மதன்குமார் அவர்கள் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பித்த கடிதம் நாள். 02.02.2006. (அசல்).
3. பிற வாரிசுதாரர்களின் மறுப்பின்மை சான்று. (அசல்).
4. 18 கலம் கொண்ட முறைப்படுத்தப்பட்ட கடிதம்.(அசல்)
5. பணிநியமன ஆணையின் நகல்.
6. அரசு ஊழியரின் இறப்பு சான்றிதழ் (அசல்)



Scanned by TapScanner

7. வாரிசு சான்றிதழ் (அசல்)
8. வரியநிலைச் சான்றிதழ் (கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற வழங்கப்படும் ஒருங்கிணைந்த சான்றிதழ். (அசல்)
9. விண்ணப்பதாரரின் கல்வி சான்றிதழ் (S.S.L.C.,) (அசல்)
10. கல்வி சான்றுகளின் உண்மை தன்மை அறியும் சான்று. (அசல்)
11. மாற்றுச் சான்றிதழ் (அசல்)
12. விண்ணப்பதராரின் உறுதிமொழி (அசல்)
13. சாதிச்சான்றிதழ் (அசல்)
14. அரசு கடிதம் எண்:2941/க்யூ1/94-1 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 01.03.1994 இன்படி பணி வரண்முறை செய்ய குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் கோப்பு அனுப்பபட்டதற்கான சான்று (அசல்.).

மேலும், மேற்காணும் அசல் மூலச்சான்றுகளை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையினை இக்கடிதம் கிடைக்கபெற்ற 3 தினங்களுக்குள் தவறாது அனுப்பி வைக்குமாறும் சென்னை, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ப.சரத்பாபு
அரசு இணை செயலாளர்/
இணை மருத்துவக்கல்வி இயக்குநர் (நிர்வாகம்)

உண்மை நகல்/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

11/3/22
அலுவலக கண்காணிப்பாளர்.

11/3/22

பெறுநர் :

1. திரு.A.மதன்குமார், இளநிலை உதவியாளர். (உரிய வழியாக)

2. முதல்வர்,
அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை
சென்னை-10.

3. மாநில கணக்காயர், சென்னை-18.

Scanned by TapScanner

## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.A.மதன்குமார் (த/பெ. (லேட்) K.ரோசய்யா) இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (எடி2) துறை**

மருத்துவக் கல்வி இயக்ககம் தபால் பிரிவு 03 MAR 2021 சென்னை-10

அரசாணை (2டி) எண்.34

நாள்: 17.02.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி, மாசி – 05

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, நாள். 23.01.2020.
3. மருத்துவக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.56179/நி2/ 4/2020, நாள் 08.12.2020.

******

**ஆணை:-**

மேலே மூன்றில் படிக்கப்பட்ட மருத்துவக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், சென்னை, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவமனை பணியாளராக (Hospital Worker) பணியாற்றிய திரு.K.ரோசய்யா என்பவர் 30.08.2004 அன்று பணியிடையே மரணமடைந்து விட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் நிறைவு பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 01.01.1948 என்றும், பணியிலிருந்திருப்பின் அவருடைய உத்தேச ஒய்வு பெறும் நாள் 31.12.2007 என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இறந்த அரசு ஊழியரின் மகன் தனக்கு பணிநியமனம் வேண்டி 02.02.2006 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், அவரது பிறந்த தேதி 13.12.1978 என்றும், மனுதாரராகிய திரு.A.மதன்குமார் என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், அவரை தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி இளநிலை உதவியாளராக சென்னை, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக் கல்லூரி மருத்துவமனையில், 27.08.2018 முற்பகல் பணியில் இணைந்துள்ளார் என்றும் தெரிவித்து, திரு.A.மதன்குமார் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 27.08.2018 முற்பகல் முதல் அவரது பணியை வரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

(த.பி.பா.)

Scanned by TapScanner

2. மருத்துவக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து, அதனை ஏற்றுக்கொண்டுள்ளது. அதன்படி திரு.A.மதன்குமார், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 27.08.2018 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் இசைவுகளை முறையே அவற்றின் அலுவல் சாரா குறிப்பு எண்.1481/க்யூ1/2021-1, நாள் 01.02.2021 மற்றும் அலுவல் சாரா குறிப்பு எண்.3188/ஜி2/2021-1, நாள் 04.02.2021-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை-600 010.
திரு.A.மதன்குமார், இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-600 018.
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏகவுப்பிரிவு) துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Rc.No. 2266/E1/1/2021

Govt. Kilpauk Medical college Hospital Dated: .03.2021

Copy communicated

JUNIOR ADMINISTRATIVE OFFICER
GOVT. KILPAUK MEDICAL COLLEGE HOSPITAL
CHENNAI - 600 010.

To
The Individual
- Through office superintendent
GKMCH-10

Scanned by TapScanner